(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 32.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூன் 20 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 யூன் 19 ஆம் திகதி ‘இலங்கைப் பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)’ மற்றும் ‘தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்)’ எனும் சட்டமூலங்களில் கௌரவ சபாநாயகரினால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர் —

(i) 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும், கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை மற்றும் கணக்குகள் கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தபால் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கல்வி அமைச்சர், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய விளையாட்டு நிதியத்தின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) சட்டவாக்க நிலையியற் குழுவின் தவிசாளர் பிரதிச் சபாநாயகர் கௌரவ அஜித் ராஜபக்ஷ அவர்கள் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே "சமாதி தியான மற்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலம் பற்றிய சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையையும் அதன் கூட்ட அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவினால் அறிக்கையிடப்பட்டவாறு 2024 யூலை 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பரிசீலிக்கப்படுமாக.

(2) சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி (திருமதி) தலதா அதுகோரல சார்பாக குழு உறுப்பினர் கௌரவ (கலாநிதி)(திருமதி) ஹரினி அமரசூரிய அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2022 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன் அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு ஒழுங்கமைப்பிற்கான (யுனெஸ்கோ) தேசிய ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம் தொடர்பிலான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(4) பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ புத்திக பத்திறண அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2022 ஆம் ஆண்டுக்கான இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கை;

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை;

(iv) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான தலவாக்கலை - இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(v) 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(vi) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை;

(vii) 2012, 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான எல்கடுவ பிளான்டேஷன் கம்பெனி லிமிடெட்டின் வருடாந்த அறிக்கைகள்; மற்றும்

(viii) 2020/2021 ஆம் ஆண்டுக்கான களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) மட்டக்களப்பு, மதுபானசாலை வீதி, இல. 607 இல் வதியும் திரு. ரீ.கோபாலகிருஷ்ணனினது 2023.11.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டக்ளஸ் தேவானந்தா சமர்ப்பித்தார்.

(2) நாகுலுகமுவ, வைத்தியசாலைக்கு அருகாமையில், 'உதய' எனும் முகவரியில் வதியும் திரு. யூ.கே. ரத்னவீரவினது 2024.05.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. குடிவரவு:** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (இலங்கையினுள் ஆட்கள் உட்பிரவேசிப்பதனையும் இலங்கையிலிருந்து புறப்படுவதனையும் கட்டுப்படுத்துவதற்காகவும்; இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்கள் இலங்கையில் தங்கியிருப்பதனைக் கட்டுப்படுத்துவதற்காகவும்; பயண ஆவணங்களை வழங்குவதற்காகவும் (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தையும் 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்) மற்றும் வெளிச்செல்கை அனுமதிப்பத்திரச் சட்டத்தையும் நீக்குவதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 யூலை 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய மேற்பார்வை குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

6. (ஆ) **இலங்கையில் முன்மொழியப்பட்ட 'வணிக தொழில்முயற்சிகளுக்கான தயார்நிலை (B-READY ) சுட்டெண்' பற்றிய தயார்படுத்தல் தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையில் முன்மொழியப்பட்ட 'வணிக தொழில்முயற்சிகளுக்கான தயார்நிலை (B-READY ) சுட்டெண்' பற்றிய தயார்படுத்தல் தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரை களையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2024 மார்ச் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேடகுழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை 102 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2024 யூலை 22 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 யூலை 09 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. சட்டமூலம் கொண்டுவர அனுமதி :** "கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் பிரேரிக்க, கௌரவ எம். ஏ. சுமந்திரன் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**9. பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம்** : ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் தொடங்குவதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. (2024 யூன் 04 ஆம் திகதி)

''சட்டமூலம் தற்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக'' எனும் பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப் பெற்று விவாதம் தொடர்ந்தது.

(பி.ப.1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய தலைமை தாங்குவாராக" என கௌரவ மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.54 மணிக்கு கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக" என கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.11 மணிக்கு சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.46 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதன் பிரகாரம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் நிறைவேற்றப்பட்டது.

2 ஆம் வாசகம்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன சார்பாக கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி சமர்ப்பித்த திருத்தம்: சிங்கள மொழிப் பிரதியில் 3 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை உடனடுத்து பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு பிரேரித்தார்.

> ''(ඒ) සමාන වටිනාකමකින් යුත් රැකියා සඳහා ස්ත්‍රීන් හා පුරුෂයන් අතර සමාන වේතනයක් ලබාදීම තහවුරු කිරීම සඳහා නීති හා ක්‍රියාමාර්ග සංශෝධනය කිරීම ප්‍රවර්ධනය කිරීම''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ கெவிந்து குமாரதுங்க சமர்ப்பித்த திருத்தம்: சிங்கள மொழிப் பிரதியில் 2 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியில் பின்வருவனவற்றை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரேரித்தார்:-

> ''ස්ත්‍රී පුරුෂභාවය සහ ලිංගික දිශානතිය'' යන වචන ඉවත් කර, ''කාන්තාවන්ගේ ලිංගිකත්වය'' යන වචන ආදේශ කරන්න.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு சார்பாக 05: எதிராக 14 மற்றும் 03 பேர் வாக்களிக்காது தவிர்ந்திருந்தும் நிராகரிக்கப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்களித்தல் முறைமையைப் பயன்படுத்துவதன் மூலம் இருபத்தொன்று (21) உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 006. Susil Premajayantha | No |
| G 026. Mohan Priyadarshana De Silva | No |
| G 027. Janaka Wakkumbura | No |
| G 030. Thenuka Vidanagamage | No |
| G 032. Lasantha Alagiyawanna | No |
| G 033. Rohana Dissanayaka | No |
| G 036. Vijitha Berugoda | No |
| G 054. Geetha Samanmale Kumarasinghe | No |
| G 058. Anupa Pasqual | Abstain |
| G 070. Sarath Weerasekara | Yes |
| G 083. Sanjeeva Edirimanna | No |
| G 091. Kulasingam Dhileeban | No |
| G 092. Sudarshana Denipitiya | No |
| O 017. A. L. M. Athaullah | No |
| O 054. Wimal Weerawansa | Yes |
| O 057. Harini Amarasuriya | Abstain |
| O 075. Chandima Weerakkody | Abstain |
| O 088. Sudarshini Fernandopulle | No |
| O 090. Jayantha Samaraweera | Yes |
| O 106. Wasantha Yapabandara | Yes |
| O 109. Gevindu Cumaratunga | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் செயலாளர் நாயகம் பின்வரும் பெயரை அழைப்பதன் மூலம் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர் வாக்களிப்பினை மேற்கொண்டார்:—

| | |
|---|---|
| (Mrs.) Manjula Dissanayake | No |

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம் நிறைவேற்றப்பட்டது.

4 ஆம் வாசகம்

கௌரவ கெவிந்து குமாரதுங்க அவர்கள் சமர்ப்பித்த திருத்தம்: சிங்கள மொழிப் பிரதியில் 3 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரி முதல் 25 ஆம் வரி வரையான (இரண்டு வரிகளும் உட்பட) வரிகளை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரேரித்தார்.

"(අ) ඇමතිතුමා විසින් කොමිෂන් සභාවේ සාමාජිකයන් 5 දෙනෙකු ද

(ආ) කතානායකවරයා විසින් පත් කරන ලද පාලර්මේන්තුවේ මන්ත්‍රීවරියන්ගේ සංසදයේ සාමාජිකයන් 2 දෙනෙකු ද "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு சார்பாக 11: எதிராக 14 மற்றும் 01 பேர் வாக்களிக்காது தவிர்ந்திருந்தும் நிராகரிக்கப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2)(ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையின் கீழ் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபத்தைந்து (25 ) பேர் கீழ் குறிப்பிட்ட பிரகாரம் வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 006. Susil Premajayantha | No |
| G 026. Mohan Priyadarshana De Silva | No |
| G 027. Janaka Wakkumbura | No |
| G 030. Thenuka Vidanagamage | No |
| G 032. Lasantha Alagiyawanna | No |
| G 033. Rohana Dissanayaka | No |
| G 036. Vijitha Berugoda | No |
| G 054. Geetha Samanmale Kumarasinghe | No |
| G 058. Anupa Pasqual | No |
| G 070. Sarath Weerasekara | Yes |
| G 083. Sanjeeva Edirimanna | No |
| G 091. Kulasingam Dhileeban | No |
| G 092. Sudarshana Denipitiya | Abstain |
| G 095. Muditha Prishanthi | No |
| G 110. Manjula Dissanayake | No |
| O 006. Gayantha Karunatilleka | Yes |
| O 007. Lakshman Kiriella | Yes |
| O 017. A. L. M. Athaullah | No |
| O 054. Wimal Weerawansa | Yes |
| O 057. Harini Amarasuriya | Yes |
| O 075. Chandima Weerakkody | Yes |
| O 088. Sudarshini Fernandopulle | Yes |
| O 090. Jayantha Samaraweera | Yes |
| O 106. Wasantha Yapabandara | Yes |
| O 109. Gevindu Cumaratunga | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (இ) இன் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம் பின்வரும் பெயரை அழைப்பதன் மூலம் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர் வாக்களிப்பினை மேற்கொண்டார்:—

| | |
|---|---|
| Jagath Priyankara | Yes |

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய அவர்கள் சமர்ப்பித்த திருத்தம்: சிங்கள மொழிப் பிரதியில் 7 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரேரித்தார்.

"කොමිෂන් සභාව සමඟ සාකච්ඡා කොට අමාත්‍යවරයා විසින් අනුමත කරගනු ලැබිය යුතුය"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 முதல் 9 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

10 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:

“உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மை”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 முதல் 16 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

17 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:

“ஆயின் மேலும், ஆணைக்குழுவானது, 29 ஆம் பிரிவின்கீழ் பாராளுமன்ற ஆணையாளரினால் ஏலவே விசாரணை நடாத்தப்பட்டிருப்பின், பெண்களின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை தொடர்பிலான ஏதேனும் விண்ணப்பத்தை விசாரித்தலாகாது என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆணைக்குழு அப்பிரிவின் ஏற்பாடுக்கிணங்க செயலாற்றுதலும் வேண்டும்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் வாசகம்

17 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“நியாயசபைக்கு எந்த ஒரு மாத காலப்பகுதியினுள் விண்ணப்ப”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் வாசகம்

18 ஆம் பக்கத்தில் 23 ஆம் மற்றும் 24 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் 22 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாத்துக்கு முன்னர் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21 ஆம் வாசகம்

19 ஆம் பக்கத்தில் 8 முதல் 10 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆற்றுப்படுத்துகின்றவிடத்து, 22 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாமானது";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 18 மற்றும் 19 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(இ) பிணக்கானது மத்தியஸ்தர்கள் குழாத்துக்கு எத்தேதியன்று ஆற்றுப்படுத்தப்பட்டதோ அத்தேதி";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 27 முதல் 32 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் வாசகம்

20 ஆம் பக்கத்தில் 1 முதல் 3 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 7 முதல் 9 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"உடன்படிக்கையொன்று என்ற வடிவத்தில், மத்தியஸ்தர்கள் குழாத்தினால் எழுத்தில் இடப்படுதல் வேண்டும்";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“மிடப்படுதலும் வேண்டும். மத்தியஸ்தர்கள் குழாம் உடன்படிக்கையின்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“மத்தியஸ்தர்கள் குழாம் அதற்கிணங்க நிலைமையை ஆணைக்குழுவுக்கு”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

23 முதல் 28 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

29 ஆம் வாசகம்

27 ஆம் பக்கத்தில் 27முதல் 29 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“அறியப்படவேண்டியவருமான ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர், இன்னலுற்ற ஆளொருவரினால் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறையுடன்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் பக்கத்தில் 30 முதல் 32 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

30 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

31 ஆம் வாசகம்

30 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“எவையேனும் சேமநல மற்றும் பாதுகாப்புத்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 ஆம் வாசகம்

31 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“படவேண்டிய நிதியமொன்று, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

33ஆம் வாசகம்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன சார்பாக கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி அவர்கள் சமர்ப்பித்த திருத்தம்: சிங்கள மொழிப் பிரதியில் 27 ஆம் பக்கத்தில் 15 முதல் 17 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரேரித்தார்.

“කොමිෂන් සභාව විසින් අරමුදලේ පවත්නා ඊට වහාම අවශ්‍ය නොවන මුදල් කොමිෂන් සභාව විසින් තිරණය කරනු ලබන පරිදි කාන්තාවන් සවිබල ගැන්වීමට සහාය වන්නාවූ වැඩසටහන්වල ආයෝජනය කරනු ලැබිය හැකිය.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

34 முதல் 35 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

36 ஆம் வாசகம்

36 ஆம் பக்கத்தில் 1 முதல் 4 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(4) இருபத்தோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமமொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

37 முதல் 41 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

42 ஆம் வாசகம்

38 ஆம் பக்கத்தில் 12 வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

43 மற்றும் 44 வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய வாசகங்கள்

3 ஆம் பக்கத்தில் 16 வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு புதிய வாசகத்தைப் பிரேரித்தார்:-

"பெண்களின் உரிமைகளினது பாதுகாப்பும் முன்னேற்றமும்

3. ஒவ்வொரு பெண்ணும் பெண்களின் உரிமைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன் பெண்கள் எவருக்கும் அத்தகைய உரிமைகள் மறுக்கப்படுதலுமாகாது.

"வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 3 வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு புதிய வாசகத்தைப் பிரேரித்தார்:-

"மத்தியஸ்தர்கள் குழாத்தை நியமித்தல்

22. (1) பிரிவுகள் 21, 22 மற்றும் 36 இன் நோக்கத்துக்காக, சட்டம், நிருவாகம், கல்வி அல்லது பெண்களின் வலுவூட்டல் துறைகளில் எண்பிக்கப்பட்ட அறிவு, அனுபவம் மற்றும் மேன்மை என்பவற்றைக் கொண்டுள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட மத்தியஸ்தர்கள் குழாமொன்று நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) மத்தியஸ்தர்கள் குழாத்துக்கான நடத்தைக்கோவை, மத்தியஸ்தர்கள் குழாத்தின் பதவிக்காலம் மற்றும் ஊதியம் என்பன விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது மத்தியஸ்த செயன்முறையை நடாத்துவதற்கு ஏற்புடையதாக வேண்டிய நடவடிக்கைமுறையை எடுத்துக் கூறும் விதிகளை ஆக்குதல் வேண்டும்.".

"வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விரிவுப்பெயர்

விரிவுப்பெயரை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்:-

> ‘‘பெண்களின் வலுவூட்டலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் பற்றிய தேசியக் கொள்கையை வகுத்தமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும்; பெண்களின் உரிமைகளுக்கான பாராளுமன்ற ஆணையாளரை நியமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளைத் தாபிப்பதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.”

‘‘திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“விரிவுப்பெயர் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**10. யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

‘‘சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதி சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 4 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

5 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(xiv) காடுபேணல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள அவரது நியமித்தர்;

(xv) வனசீவராசிகள் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள அவரது நியமித்தர்;

(xvi) கலாசாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியத்தின் அலுவலர் ஒருவர்;

(xvii) (451 ஆம் அத்தியாயமான) காடுபேணல் கட்டளைச் சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காடு பேணுநர் தலைமையதிபதி;

(xviii) (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வனசீவராசிகள் பணிப்பாளர் தலைமையதிபதி;" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 முதல் 10 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

11 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாத உறுப்பினர்களாதல் வேண்மேன்ப";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 முதல் 37 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது, திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (e-Motoring கருத்திட்டத்தை விரைவாக செயற்படுத்தல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அப்போது பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே பி.ப. 6.40 மணிக்கு இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பிரதிச் சபாநாயகரால் பாராளுமன்றம் வினாவின்றி ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2024 யூலை 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.